உ

சிவமயம்

# ஸ்ரீ
# முன்னநாத சுவாமி
# வடிவழகி அம்பாள்
# திருவூஞ்சல்

பிரட்டன் பிரஸ்.

உ

திருச்சிற்றம்பலம்.

# முன்னநாதேஸ்வரர் திருவூஞ்சல்

[யாழ்ப்பாணத்து நவாலியூர்-
திரு. க. சோமசுந்தரப்புலவர் பாடியது.]

## காப்பு

முந்துமொரு மூவருக்கு மூல மாகி
முழுதுலகு மீன்றவடி வழகி யோடு
சந்தமலர்த் தடம்பொலிமுன் னேச்சு ரத்திற்
றுறைக முளைத்தசிவக் கொழுந்தைப் போற்றிச்
செந்தமிழின் னிசையூஞ்சற் றிருப்பாட் டோதச்
சிந்திப்போர் தீவினைகள் தீர்த்துக் காக்கு
மைந்துகரத் திந்துமுடித் தொந்தித் தந்தி
யானைமுகன் ஞானமலர் காப்ப தாமே.

## நூல்

திருவோங்கு மிருமாயை தூணா நாட்டி
சிவமோங்கு தத்துவங்கள் விட்டம் பூட்டி
அருவோங்கு கலையாதி வடங்கள் மாட்டி
அணியோங்கு மறுநான்கும் பீடங் கூட்டி
உருவோங்க வுஞற்றுமுல கூஞ்சன் மீதே
ஒளியோங்கு மம்மைவடி வழகி யோடு
முருகோங்கு பொழின்முன்னேச் சுரத்து வாழும்
முன்னநா தேஸ்வரரே யாடீ ரூஞ்சல்— க.

வெளிமருவு மிருசுடருங் குடைகள் தாங்க
விரைமருவு மணிலனணி கவரி வாங்க
நளிமருவு புனலரசன் பனிநீர் தூவ
நயமருவு மடவியம னுடைவாள் காவ

களிமருவு தவமுனிவ ராசி நீடக்
கயன்மருவு நயனிவடி வழகி யோடு
மொழிமருவு புகழ்முன்னேச் சுரத்து வாழும்
முன்னநா தேஸ்வரரே யாடி ரூஞ்சல்— உ.

சந்தணியு மாடகயாழ் முனிவன் மீட்ட
தகையணியு மணிமுழவம் நெடுமால் கூட்ட
வந்தணியுங் கந்தருவர் வரிப்பண் பாட
மறையணியு மலரினயன் தாளம் போட
கொந்தணிகுந் தளமடவார் நடன மாட
கோலணியுங் குவளைவிழி யழகி கூட
முந்தணியும் பொழின்முன்னேச் சுரத்துவாழும்
முன்னநா தேஸ்வரரே யாடி ரூஞ்சல் ங.

வானகதுந் துபிமுழங்கச் சங்க மேங்க
மண்ணகதூ ரியமிசைக்க மறைக ளோங்க
தேனகமந் தாரமலர் மாரி வீச
சீரகச்செந் தமிழ்மறைமந் திரங்கள் பேச
ஊனகநெக் குருகியடி யவர்க ளாட
உள்ளகஞ்சே ரோங்கார வடிவி யோடு
மோனகலை யருளுமுன்னேச் சுரத்து வாழும்
முன்னநா தேஸ்வரரே யாடி ரூஞ்சல்— ச.

வானமருங் கங்கைவர நதிநீர் பன்னீர்
வரமமரு மந்திரநீ ரிளநீர் கூட்டி
ஆனமரு மைந்துமுய ரன்பா லாட்டி
அணியமருந் துகிலுடுத்துக் கலன்கள் மாட்டி
மானமரு ஞானமலி தேய்வை சாத்தி
மலரமருஞ் செங்கைவடி வழகி யோடு
மோனமுனி வரர்தொழுமுன் னேச்சு ரத்து
முன்னநா தேஸ்வரரே யாடி ரூஞ்சல்— ரு.

கைம்மலிந்த பூமாலை கனக மாலை
    கவிமலிந்த பாமாலை கவினச் சூட்டி
நெய்ம்மலிந்த புத்தமுதுங் கனியுங் கூட்டி
    நிரைமலிந்த கர்ப்பூர நிறைவு காட்டி
மெய்ம்மலிந்த தொண்டர்குழாம் விரும்பி யேத்த
    வேன்லிமந்த கண்ணிவடி வழகி யோடு
மொய்ம்மலிந்த பொழின்முன்னேச் சுரத்து வாழும்
    முன்னநா தேஸ்வரரே யாடீ ரூஞ்சல்— ௬.

பொன்னேறு மலரிதழி யறுகு மாடப்
    புரியேறு சடையாட நிலவு மாட
கொன்னேறு மக்குமணி மாலை யாட
    கூரேறு மழுவாட மானு மாட
மின்னேறு துடியிடைமென் கொம்பு மாட
    விடையேறு நந்திமுதல் விபுத ராட
முன்னேறு புகழ்முன்னேச் சுரத்துவாழும்
    முன்னநா தேஸ்வரரே யாடீ ரூஞ்சல்— ௭.

கைம்மேவு மதகரடக் களிறு மோர்பால்
    கதிர்மேவு சுடர்நெடுவேற் காளை யோர்பால்
மைம்மேவு கஞ்சுகத்து வடுக னோர்பால்
    வலிமேவு மடல்வீர வரத னோர்பால்
மெய்ம்மேவு முருத்திரபல் கணத்த ரோல்பால்
    விதுமேவு நுதலிவடி வழகி யோர்பால்
மொய்ம்மேவு ஞானமுன்னேச் சுரத்து வாழும்
    முன்னநா தேஸ்வரரே யாடீ ரூஞ்சல்— ௮.

பழிவிரவு முப்புரங்கள் படுத்தல் பாடி
    பகைவிரவு தக்கன்மகம் கெடுத்தல் பாடி
களிவிரவு மதமலையை யுரித்தல் பாடி
    கைவிரவு கரும்பனுட லெரித்தல் பாடி

துளிவிரவு கங்கைசடைச் சூடல் பாடி
    துடிவிரவு மிடையவளோ டாடல் பாடி
மொழிவிரவு புகழ்முன்னேச் சுரத்து வாழும்
    முன்னநா தேஸ்வரரே யாடி ரூஞ்சல்— ௯.

மாசுணச்செஞ் சடையீரே யாடி ரூஞ்சல்
    வஞ்சகநெஞ் சடையீரே யாடி ரூஞ்சல்
ஆசறுமா தரங்கத்தி ராடி ரூஞ்சல்
    அருடருமா தரங்கத்தி ராடி ரூஞ்சல்
தேசுமதி முடித்தவரே யாடி ரூஞ்சல்
    தீயமதி முடித்தவரே யாடி ரூஞ்சல்
மூசுமரி முரல்பொழின்முன் னேச்சு ரத்து
    முன்னநா தேஸ்வரரே யாடி ரூஞ்சல்— ௧௦

பூவாழி பொன்மாரி பொழிந்து வாழி
    பூதிகண்டி யைந்தெழுத்தும் பொலிந்து வாழி
மாவாழுந் திருமுகத்து வள்ளல் வாழி
    வள்ளிதெய்வ யானைமகிழ் மணாளன் வாழி
பாவாழு மயில்வாழி யடியார் வாழி
    பைந்தமிழ் பொன் னூஞ்சலிசைப் பதிகம் வாழி
மூவாத வருள்வடிவாம் பிகையும் வாழி
    முன்னநா தேஸ்வரரும் வாழி வாழி— ௧௧.

முற்றும்
திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

# ஸ்ரீ முன்னநாதஸ்வாமி வடிவழகி அம்பாள் திருவூஞ்சல்

## 1. காப்பு

திருவளரு மிலங்கா புரியிலோங்குஞ்
சிலாபநக ரந்தன்னில் மேவும்
தருவளரு முனீச்சுர தலத்திலோங்கித்
தவப்பெரியார் மனத்துள் வாழும்
உருவளரும் வடிவழகி பாகங்கொண்ட
உவமையிலா முன்னநா தேசுரர்மேல்
கருவளரு மூஞ்சலிசை கனிந்துபாடக்
கணபதித னிருசரணங் காப்பதாமே

## 2. ஊஞ்சல்

திருமலியும் நால்வேதக் கால்களுநட்டி
சேர்ந்தபல சாகைகளாந் தழைகள்பூட்டி
உருமலியும் பிரணவமே பலகையாக
ஊஞ்சலிலே வாஞ்சைமிக வேகந்தூண்ட
கருமலியு மைந்துவகைக் கிரிகைதேங்க
கனங்குழலாள் சுந்தரியாள் பாகம்மேவ
தருமலியும் முன்னநா தேசுரரே
தன்னைநிகர் வடிவாம்பிகையே யாடிரூஞ்சல்

## 3. ஆபரணம்

முத்தினொடு வைரங்கள் புஷ்பராகம்
முழுநீலம் பச்சைகோ மேதகமும்
சித்திரமார் பவளமொடு கெம்புங்கூட
செறிந்தபல வாபரணங்கள் மின்ன
தித்திபறை தவில்பம்பை முரசினோடு
சிறுசின்ன மெக்காளம் பேரிவீணை
நித்தமொலி முன்னநா தேசுரரே
நிமலவடி வாம்பிகையே யாடிரூஞ்சல்

## 4. சபா

திருமாலும் நான்முகனும் பாங்கில்மேவ
சீர்மாதுங் கலைமகளும் நாண்தொட்டாட்ட
உருவளரு மங்கிதி வர்த்தியேந்த
உயர் வாயு நற்றாபங் தாங்கிநிற்ப
இருபாலுங் கணிகையர்கள் இசையோடாட
இரவியொடு சந்திரனும் வட்டந்தாங்க
அருளோங்கு முன்னநா தேசுரரே
அன்னைவடி வாம்பிகையே யாடீரூஞ்சல்

## 5. ஸ்ரீ சக்ரம்

பிந்துவொடு முக்கோண மெண்கோணம்
பிரியமுள தசகோணம் இரண்டும்மேவ
சிந்தைநிறை பன்னுன்கு கோணமாகச்
சிறந்ததள மெட்டோடு பதினாறும்
சொந்தமிகு விருத்தங்கள் மூன்றுபூமி
சொன்ன முறைச க்கரத்தில்
வந்தருளு முன்னநா தேசுரரே
வரதவடி வாம்பிகையே யாடீரூஞ்சல்

## 6 ஸ்தலமஹாத்மியம்

சீராரும் இலங்கைவாழ் மன்னரேத்தி
சிறப்புடனே வெற்றிபுகழ் வீடும்பெற்று
பாராருங் கனநிதியும் பலவளமும்
பணிபொன்னும் பரிந்து நல்கத்
தாராருஞ் தேசுடனே யிலங்குநாத
சடைகங்கை யறுகோடு மதியஞ்சூடுங்
காராரும் முன்னநா தேசுரரே
கௌரிவடி வாம்பிகையே யாடீரூஞ்சல்

## 7. சம்பவம்

பலசமய வடியார்கள் பரவியேத்தப்
பாங்கினெடு மறையோர்கள் வேதமோதத்
தலமருவுந் தமிழ்வேத கீதம்பாடத்
தருமாதர் தமைமறந்து வணக்கம்பேச

நலமோங்கு வாத்தியங்கள் எங்குமார்ப்ப
நாடாளும் முடிமன்ன ரடிபணிய
வலந்திகழு முன்னநா தேசுரரே
வாமிவடி வாம்பிகையே யாடீரூஞ்சல்

## 8. வாழி

வேதமோடா கமங்க ளென்றும் வாழி
வித்தகஞ்சே ரந்தணர்க ளாவும் வாழி
நீத முடனர சர்நெறி யோங்கி வாழி
நிறைவணிகர் குலநீதி யென்றும் வாழி
தீதகற்று, முழுவோரும் பாரும்வாழி
திடபக்தி செறிதொண்டர் நாளும் வாழி
நாதணியு முன்ன நாதேசுரரும்வாழி
தையல்வடி வாம்பிகையும் வாழி வாழி

## 9. எச்சரிக்கை

வருவார்வினை தவிர்க்கும்பரம் பொருளே யெச்சரிக்கை
வடிவாம்பிகை வாமந்திகழ் வரதா யெச்சரிக்கை
திருவார்சடை முடியாயெமை யுடையா யெச்சரிக்கை
சிவமேதவ முதலோர்நினை முதல்வா யெச்சரிக்கை
மருவும்பல வடியார்தொழு மலையே யெச்சரிக்கை
மறையாகம நிதியேதரு மணியே யெச்சரிக்கை
உருவார்குண நிதியேஉயர் நிலையே யெச்சரிக்கை
உருவேயரு வெளியேயொளி யுருவே யெச்சரிக்கை.

## 10. பராக்கு

சித்த மிசை யுறைகின்ற தேவீ பராக்கு
சிந்தா மணிக்ரகச் செல்வீ பராக்கு
நத்துமடி யார்கள்வினை தவிர்ப்பாய் பராக்கு
நாதன் தன் பாங்கிலுறை நல்லாய் பராக்கு
சுத்தசிவை யானவெங்கள் சுகமே பராக்கு
தொல்லுல கோர்க்கருளுந் தோகாய் பராக்கு
பத்தி செறி யன்பருளம் படிவாய் பராக்கு
பாசவினை வேரறுக்கும் பாவாய் பராக்கு

## 11. லாலி

அன்பர்பணி அற்புதனே அமரர்தொழு சிற்பரமே
ஆதியுமை அம்பிகையா ளருகமருந் தேவே
வன்பரிடை சேராத வரதபுர லாலி
வரங்கள்தரு முன்னநக ரீசலாலி

## 12. மங்களம்

மங்களம் மங்களம் நித்ய சுப மங்களம்
திங்களணிநாதருக்கும் தேவிவடிவாம்பிகைக்கும்
பொங்குகுண சீலருக்கும் போற்றுசிவ தேவியர்க்கும்—மங்க.
தேவாதி தேவருக்கும் தேவர் புகழ் சுந்தரிக்கும்
சிவலோகநாதருக்கும் சிவானந்த தேவியற்கும்— மங்க.
முன்ன நகர்வாசருக்கும் முத்தியருள் தேவியற்கும்
மின்னுசடைவள்ளலுக்கும் மின்கொடியாளம்பிகைக்கும்-மங்க.
சுத்தசிவமானவர்க்கும் சோதிநிறை தேவியற்கும்
மத்தமணிநாதருக்கும் மாதுவடிவாம்பிகைக்கும்— மங்களம்.

சி. பாலசுப்ரமண்யக் குருக்கள்.

UNIVERSITY OF JAFFNA
Library
SRI LANKA
ARCHIVES
117935